**செய்தி வெளியீடு எண் :1573** **நாள் : 04.08.2023**

**<u>தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்திற்கு உறுப்பினர் நியமனம்</u>**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படுத்தும் வகையில் உருவாக்கிட உரிய சட்டம் இயற்றப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி எண் 110ன் கீழ் அறிவிக்கப்பட்டு அதற்கான உரிய சட்டமும் இயற்றப்பட்டது (தமிழ்நாடு சட்டம் 17/2021). இச்சட்டம் 13.10.2021 முதல் அமலுக்கு வந்தது.

இவ்வாணையம் மாண்புமிகு நீதியரசர் திரு.P.R. சிவகுமார், சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிற நிலையில் தற்போது காலியாக உள்ள ஒரு உறுப்பினர் பணியிடத்தில் திருமதி J.ரேகா பிரியதர்ஷினி அவர்களை நியமனம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், புதிததாக நியமனம் செய்யபட்ட உறுப்பினரின் பதவி காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in